மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூட இந்த அவையில் ஒரு தடவை சொல்லியிருக்கிறார், ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கவேண்டுமென்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் காஞ்சிபுரம் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையில் புதிய ஒரு திட்டத்தை வருகின்ற மானியக் கோரிக்கையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 336, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் கேட்கிறார். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

336—

சென்னை நகரில் கடற்கரையோரப்பகுதி இடங்களில் பல்லடுக்குக் கட்டிடங்கள் கட்டத் தடை விதித்தல்.

*10362 திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை நகரில் கடற்காற்று நகருக்குள் தடையின்றி வீசிட, கடற்கரையோரப் பகுதிகளான ராயபுரம், ஜார்ஜ்டவுன், சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர், அடையார், திருவான்மியூர் ஆகிய பகுதிகளில் பல்லடுக்குக் கட்டிடங்கள் கட்டத் தடை விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. விவர அறிக்கை தனியாக அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

சென்னை மாநகரப் பகுதியில் அடங்கிய, சென்னை மாநகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் பல்லடுக்குக் கட்டிடங்கள் (Multistoreyed buildings) கட்டுவதற்கு வளர்ச்சிக் கட்டுப்பாடு

விதிகளின்படி அனுமதி வழங்கப்படுகின்றது. இவ்விதிகளின்படி, சென்னை நகரின் கடலோர மையப் பகுதியான தீவுத்திடல் மற்றும் மெரினா கடற்கரையோரப் பகுதிகள் ஆகியவற்றில் பல்லடுக்குக் கட்டிடங்கள் கட்டப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் இத்தகைய கட்டிடங்கள் கட்டப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின்படி, பல்லடுக்குக் கட்டிடங்களில் சுற்றிலும் விடப்பட வேண்டிய திறவிடங்கள் குறைந்தது 7 மீட்டர்கள் இருக்கவேண்டும். எனவே, கடற்காற்று சென்னை நகருக்குள் வீசிட பல்லடுக்குக் கட்டிடங்கள் தடையாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆதலால், கடற்கரையோரப் பகுதிகளான ராயபுரம், ஜார்ஜ் டவுன், சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர், அடையார், திருவான்மியூர் ஆகிய பகுதிகளில் (மேலே குறிப்பிட்டுள்ள தீவுத்திடல் மற்றும் மெரினா கடற்கரையோரப் பகுதிகள் நீங்கலாக) பல்லடுக்குக் கட்டிடங்கள் கட்டுவதைத்தடை செய்ய வேண்டிய தேவை இல்லை என்று கருதப்படுகின்றது.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்க்கவில்லை. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் நீங்கள் துணைக்கேள்வி போடுவதே தவறு.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும் கூட கடற்காற்று உள்ளே வரக்கூடிய அளவுக்கு கட்டிடங்களைக் கட்டாமல் இருந்தால் இந்தப் பகுதியில் வசிக்கக்கூடிய மக்கள் அனைவருக்கும் நன்றாக இருக்குமே என்பதற்காக இந்தக் கேள்விப் போடப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தவரையில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படிதான் அனுமதி வழங்கிக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அனுமதிப்பது குறித்து போதிய அளவு கடுமையான விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு அத்தகைய கட்டிடங்கள் குறிப்பாக குறைந்த அகலம் உடைய

1993 ஏப்ரல் 13]

சாலைகளுடைய நெருக்கமான பகுதிகளில் அமைவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அதே போல் சாதாரணக் கட்டிடங்கள் போல் அல்லாமல் பல அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு சுற்றிலும் விடப்பட வேண்டிய திறவிடங்கள், காரேஜ்கள் போன்ற திறவிடங்கள் குறைந்தது 7 மீட்டர் இருக்கவேண்டும். ஆகவே, இத்தகைய கட்டிடங்களால் கடற்காற்று. சென்னை நகருக்கு வீசிட தடை ஏதும் இருக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

337—

கண்பார்வையற்ற தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குச் சலுகைகள்.

**11515 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:*

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

கண்பார்வையற்ற தம்பதியர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வேறு சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஆதிதிராவிட மக்களுக்கு அளிப்பதற்குச் சமமான சலுகைகள் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் அன்றாடம் தங்களுக்குத் தேவையான பணிகளுக்கு என்றே இன்னொருவர் உதவி தேவைப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். அப்படிப் பார்வை அற்ற தம்பதிகள் மிக சிரமத்திற்கு இடையே பல பல எதிர்பார்ப்புகளோடு தங்களுடைய குழந்தைகளை வளர்க்கிறார்கள். அப்படிப் பார்வை அற்ற தம்பதிகள் உயர் ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்புப் பயிற்சிகள், அரசுப்பணிகள் ஆகியவற்றில் வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கிறது. கண் பார்வை அற்ற தம்பதிகள் தங்கள் குழந்தைகள் நன்கு படித்து வேலை செய்து வயதான காலத்தில் தங்களைக் காப்பாற்றுவார்கள்